## August 17, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக அமெரிக்காவின் அலாஸ்காவில் நடைபெற்ற அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் - ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் இடையேயான பேச்சுவார்த்தை உடன்பாடு எதுவும் எட்டப்படாமல் நிறைவடைந்தது.
    i. முன்னதாக, போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டுமெனில், ரஷிய மொழி பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட டொனட்ஸ்க், லுஹான்ஸ்க், ஸபோரிஷியா, கெர்சான் மாகாணங்களை உக்ரைன் விட்டுக்கொடுக்க வேண்டும், நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு நிரந்தரமாகத் தடை விதிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கடுமையான நிபந்தனைகளை ரஷியா முன்வைத்தது.
    ii. ஆனால், தங்கள் நிலத்தை விட்டுத்தர முடியாது என உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கி உறுதியாகத் தெரிவித்திருந்தார்.

2. பாகிஸ்தானுக்கு மேலும் ஒரு ஹாங்கோர் வகை நீர்மூழ்கிக் கப்பலை சீனா வழங்கியது. பாகிஸ்தான் கடற்படை வலிமையை மேம்படுத்த எட்டு - ஹாங்கோர் வகை நீர்மூழ்கிக் கப்பல்களை வழங்க சீனா ஒப்பந்தம் மேற்கொண்டது.
    i. அந்த ஒப்பந்தத்தின்கீழ் வழங்கப்படும் மூன்றாவது நீர்மூழ்கிக் கப்பல் இது. சீனாவின் வூஹான் நகரில் நடந்த விழாவில் அந்தக் கப்பல் பாகிஸ்தானிடம் ஒப்படைக்கப்பட்டது.
3. போரால் பாதிக்கப்பட்ட காஸா பகுதி மக்களை வடகிழக்கு ஆப்பிரிக்க நாடான தெற்கு சூடானில் மறுகுடியமர்த்துவது தொடர்பாக அந்த நாட்டுடன் பிரதமர் நெதன்யாகு இஸ்ரேல் அரசு பேச்சுவார்த்தை நடத்துவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
    i. ஏற்கெனவே, கடந்த 1948-ஆம் ஆண்டு நடைபெற்ற அரபு-இஸ்ரேல் போரின்போது நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர். ‘நக்பா’ (பேரழிவு) என்று அந்த நிகழ்வை பாலஸ்தீனர்கள் அழைக்கின்றனர்.
    ii. தற்போது தெற்கு சூடான் போன்ற வெளிநாடுகளுக்கு தங்களை வெளியேற்றுவது மற்றொரு நக்பாவா இருக்கும் என்று அவர்கள் கருதுகின்றனர்.
4. தமிழகத்தில் கடந்த ஏழரை மாதங்களில் 3.67 லட்சம் பேர் நாய்க் கடிக்குள்ளானதாகவும், அதில் 20 பேர் ரேபிஸ் பாதிப்பு ஏற்பட்டு உயிரிழந்ததாகவும் பொது சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

i. தடுப்பூசிகளை முறையாக செலுத்தாதே அவர்கள் உயிரிழப்புக்கு காரணமா என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் கூறியுள்ளது.

ii. தெரு நாய்கள், வளர்ப்பு பிராணிகள் கடித்து காயமடையும் சம்பவங்கள் தமிழகத்தில் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

iii. பொதுவாகவே, ரேபிஸ் தொற்றிலிருந்து செல்லப் பிராணிகளையும், மனிதர்களையும் காப்பதற்கு ஒரே வழி தடுப்பூசி மட்டும்தான். ஆனால், சில நேரங்களில் ரேபிஸ் தடுப்பூசி செலுத்திக் கொண்டாலும், தொற்று ஏற்பட்டு உயிரிழக்கும் சம்பவங்கள் தொடர்ச்சியாக நிகழ்கின்றன.

iv. இதற்கு 'போஸ்ட் எக்ஸ்போஸர் ப்ரோபிலேக்சிஸ்' எனப்படும் தொற்று வாய்ப்புக்கு பிந்தைய சிகிச்சை நடைமுறைகளை சரிவர பின்பற்றாமல் இருப்பதுதான் முக்கிய காரணம் என அண்மையில் சுகாதாரத் துறை தெரிவித்திருந்தது.

v. நாய், பூனை, குரங்கு உள்ளிட்ட விலங்குகள் கடிக்கும்போது காயங்களின் அளவு மற்றும் ஆழத்தை மதிப்பிட வேண்டும். அதன் அடிப்படையில் வகை 1, வகை 2, வகை 3 என பிரித்து சிகிச்சையளிக்க வேண்டும்.

5. உள்நாட்டு தனிநபர் உருக்கு நுகர்வு 100 கிலோ என்ற மைல்கல்லைத் தொட்டுள்ளது.

i. உலகளவில் உருக்கு உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், இந்தியாவின் உருக்கு உற்பத்தி 12 சதவீதத்திற்கும் மேல் வளர்ச்சி கண்டுள்ளது. தனிநபர் உருக்கு நுகர்வு 100 கிலோவைத் தாண்டியுள்ளது.

ii. 2017-இல் தேசிய உருக்கு கொள்கை அறிமுகமா னபோது தனிநபர் உருக்கு நுகர்வு 60 கிலோ வாக இருந்தது.

iii. இந்தக் கொள்கை, 2030-31-குள் தனிநபர் நுகர்வை 160 கிலோவாகவும், கச்சா உருக்கு உற்பத்தித் திறனை 30 டன்னாகவும், தயாரிக்கப்பட்ட உருக்கு உற்பத்தியை 25.5 கோடி டன்னாகவும் உயர்த்த அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. இந்தியா வந்துள்ள தென்கொரிய வெளியுறவு அமைச்சர் சோ ஹியூனுடன் இரு தரப்பு உறவை வலுப்படுத்துவது தொடர்பாக வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆலோசனை மேற்கொண்டார்.

i. இந்த சந்திப்பு குறித்து, தென்கொரிய வெளியுறவு அமைச்சருடன் ஜெய்சங்கர் மேற்கொண்ட ஆலோசனையில் இரு நாடுகளிடையேயான வர்த்தகம், உற்பத்தி, கடல்சார் ஒத்துழைப்பு உள்பட பல்வேறு துறை சார்ந்த ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக ஆக்கப்பூர்வ பேச்சு வார்த்தையை மேற்கொண்டார்.

ii. செயற்கை நுண்ணறிவு, குறை மின் கடத்திகள் உற்பத்தி, தூய்மை எரிசக்தி, பாதுகாப்பு உள்ளிட்ட புதிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் ஆலோ சித்தனர்' என்று தெரிவிக்கப்பட்டது.

7. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருவாய் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருமானம் 2020-21-

இல் ரூ.49.11 கோடியாக இருந்த நிலையில், 2023-24-இல் ரூ.243.31 கோடியாக அதிகரித்துள்ளது. இது ஐந்து மடங்கு அதிகம் ஆகும். கடந்த ஆண்டுகளைவிட 2024-ஆம் ஆண்டில் ரூ.28.69 கோடி அதிக வருவாய் ஈட்டி மாபெரும் சாதனை படைத்துள்ளது.

8. சிறுவர்களுடன் தீங்கு விளைவிக்கக் கூடிய உரையாடல்களில் ஈடுபட மெட்டாவின் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) உரையாடல் செயலிகள் (சாட்பாட்) அனுமதிக்கப்பட்டனவா என்பது குறித்த விசாரணையைத் தொடங்குவதாக அமெரிக்காவின் ஆளும் குடியரசு கட்சியைச் சேர்ந்த செனட் சபை உறுப்பினர் ஜோஷ் ஹவ்லி அறிவித்துள்ளார்.
9. அமெரிக்காவின் வரி உயர்வால் தமிழ்நாட்டில் ஏற்படும் உற்பத்தி, வேலை வாய்ப்பு பாதிப்புகளை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில்:
   i. கடந்த நிதியாண்டில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதி மதிப்பானது 433.6 பில்லியன் டாலராக இருந்தது. அதில் 20% பொருள்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.
   ii. தமிழ்நாட்டின் மொத்த ஏற்றுமதி பொருள்களின் மதிப்பு 52.1 பில்லியன் டாலராக இருந்தது. அதில் 31 சதவீதம் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.
   iii. கடந்த நிதியாண்டில் இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு 28 % பங்கைச் செலுத்தியது. இது இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களைக் காட்டிலும் மிகவும் அதிகமாகும்.
   iv. குறிப்பாக, தமிழ்நாட்டில் ஜவுளித் துறை கிட்டத்தட்ட 75 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. அமெரிக்காவின் வரி விதிப்பு உயர்வால் ஜவுளித் துறையில் மட்டும் 30 லட்சம் பேர் வேலை இழக்கும் அபாயம் உள்ளது.